# பாலகுமாரனின் புதினம் காட்டும் குடும்பச் சிக்கல்களும் தீர்வுகளும்

**முனைவர் ச.கௌசல்யா**

**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சி – 620 002.**

**19**

**ஆய்வுச்சுருக்கம்**

குடும்ப முன்னேற்றத்தின் மீது மட்டுமல்லாமல் சமூகத்தின் மீதும் அக்கறை கொள்ளும் பொதுநல உணர்வினையும் எடுத்துக்காட்டுகின்றது. குடும்ப வாழ்க்கையில் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் விடுபடும் வழியை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள் :** எழில்-அழகு,சேய்-குழந்தை,பேதை-பெண்,பஞ்சம் –வறுமை, ஈகை-கொடை

**முன்னுரை**

புதினம் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவம். தனக்கென்றே அமைந்த ஒரு பெரிய கதைக்களத்தைக் கொண்டது. தனிமனிதனின் சிக்கல்கள் மற்றும் சமுதாய வாழ்க்கையின் பல பகுதிகளையும் சித்திரித்துக் காட்டுவதற்குரிய நிகழ்விடமாகப் புதினத்தின் கதைக்களம் அமைகிறது. எழுத்து சித்தர் என்றழைக்கப்படும் பாலகுமாரன் எழுதிய ‘சக்ரவாஹம’; என்னும் புதினம் குடும்ப உறவுகளின் அன்பு நிலையையும் பல சிக்கல்களை எதிர்கொண்டாலும் குடும்ப ஒற்றுமையைச் சிதையாமல் பாதுகாக்கும் பண்புநிலையையும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**கதைமாந்தர்கள்**

சக்கரவாஹம் என்னும் இப்புதினத்தில் துகாராம் என்பவர் கதைத் தலைவனாகவும், ஜீஜாபாய் கதைத் தலைவியாகவும் அமைந்துள்ளனர். துகாராம் எளிமையாய்ப் பேசக்கூடியவன். மிகச் சாதாரணமான மனிதராய் எல்லோருக்கும் இனியனாய் எல்லோரையும் புரிந்துக் கொள்கின்ற பக்குவம் உடையவனாய் திகழ்கின்றான். தன் இரண்டாவது மனைவியான ஜீஜாபாயிடம் மிகவும் அன்புடையவனாய், அவளை நன்றாக புரிந்து வைத்திருக்கின்ற கணவனாய் விளங்குகின்றான்.

தன் முதல் மனைவியான ருக்மாபாயைப் பார்த்துக் கொள்வதற்காகவும் அவள் நோயைக் குணப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையிலும் இரண்டாவது திருமணத்தை செய்து கொள்கிறான். இவன் ஜீஜாபாயின் மேல் அன்புடையவனாக இருந்தாலும் தன் முதல் மனைவியைக் கைவிடவில்லை. அவன் கடைசிவரை ருக்மாபாய்க்கு ஆதரவாக நின்றான். துகாராம் பெண்களின் மீது அதிக மதிப்பும் மரியாதையும் உடையவன்.

> “துகாரம் மிக எளிமையாக இருகிறானாம். அண்ணியை தாய் போல் நடத்துகிறானாம். தினமும் காலையில் அண்ணனையும் அண்ணியையும் கிழக்கு பார்த்து நிற்க வைத்து வணங்குகின்றானாம். இந்த காலத்தில் இப்படியொரு பிள்ளை உண்டா?”1

என்று அனைவரும் பாராட்டும் வகையில் திகழ்கின்றான்.

துகாராமின் இரண்டாம் மனைவியான ஜீஜாபாய் முதல் மனைவி ருக்மாபாயிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டாள். நோய்வாய்பட்;ட அவளை எந்தவொரு மனகசப்பும் இன்றி தன் தோழி போல்

பார்த்துக்கொண்டாள். அவள் உடம்பு தேறி நலமாகி விட்டால் புதிதாய் வாழ்க்கை துவங்குவாள் என்று எண்ணினாள். எளிதாக எல்லாருக்கும் இனிமையானவளாக இருக்க வேண்டும் என்று பாடுபடும் பண்புடையவளாக ஜீஜாபாய் விளங்;குகிறாள்.

**குடும்பச் சிக்கல்கள்**

திருமணம் ஒரு சமூக உறவுமுறை அமைப்பாகும். குடும்பம், பாலுறவு இனப்பெருக்கம் பொருளாதாரம் போன்ற பல காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுபட்டு அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப்பொறுப்பில் நடத்துவதற்குப் பலர் அறியச் செய்து கொள்ளும் செயலே மணம் எனப்படும். ஒருவனுக்கு ஒருத்தி என்பதே தமிழர் பண்பாடு. திருமணம் முடிந்த பின்பு குழந்தை என்ற வரம் கடவுள் கொடுத்த வரங்களில்; ஒன்றாக திகழ்கின்றது. அக்குழந்தையின் மூலமாகவே அவர்களின் சந்ததி தொடங்குகிறது. துகாராமுக்கும் ருக்மாபாயிக்கும் ஏற்பட்ட திருமணத்தின் பின்பு குழந்தை என்பது ஒரு கிடைக்கா செல்வமாகவே இருந்தது. இருப்பினும் இதனால் ஒன்றும் துகாராம் ருக்மாபாயினை வெறுக்கவோ ஒதுக்கவோ இல்லை. திருமணம் முடிந்த முதல் நாளிலிருந்து அவள்மீது கொண்ட அன்பு இறுதிவரையும் கொண்டிருந்தான்.

இரண்டாவது திருமணம் செய்யும் எண்ணம் துகாராமிற்கு இல்லை. இருப்பினும் ருக்மாபாயின் விருப்பத்தினால் இரண்டாவது திருமணம் செய்ய சம்மதித்தான்.

“தன்னால் புருஷனுக்கு எந்த உபயோகமும் இல்லை. உடனே அவருக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று கூறினாள். நல்ல பெண்ணாக பார்த்து வையுங்கள் என்று கூறினாள். இவர் வேறு எங்கேனும் சிக்கிக்கொள்வதற்கு இன்னொரு திருமணம் செய்துகொள்வது நல்லது என்;று பல பேரை உதாரணம் காட்டி துகாராமைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தாள்”2

தாய் தந்தையையே உலகமாக நினைத்து இருந்தவள் தான் ஜீஜாபாய். ஜீஜாபாயிக்கும் துகாராமுக்கும் திருமணம் முடிவு செய்யப்பட்டது. ஜீஜாபாயும் குடும்பத்தின் மீது நிறைந்த அக்கறையும் பொறுப்புணர்வும் கொண்டவளாக இருந்தாள். ஜீஜாபாயின் தாய்வீட்டிலிருந்து அரசி, தேங்காய்; இனிப்புப்பொரி ஆகிய மூன்;றினையும் கொடுத்து அதற்கு உடைய பண்புகள் போலவே நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. தேங்காயின் அமைதியையும், அரசியின் செழிப்பும், இனிப்புப் பொரியின் சுவையும் எப்போதும் ஜீஜாவிடம்; இருத்தல் வேண்டும் என்று அவளின் தாய் கூறியதை நினைவில்கொண்டு அதன்படி நடந்துகொள்கிறாள்.

**இல்லத்து அரசியாக ஜீஜாபாய்**

இந்த உலகம் பரந்துபட்டது. அன்பும் உறவுகளும் பின்னிப்பிணைந்த கூட்டுக்கலவை தான் இவ்வுலக வாழ்வியல். இவை இல்லாமல் வாழ்க்கை முற்றுப்பெறாது. இந்த உறவுகளில் கணவன் மனைவி என்ற உறவு வலிமையானது என்பது முன்னோர் வாக்கு. சாதாரண பெண்களுக்கு நடுவே ஜீஜாபாயி சற்று மாறுபட்டே காணப்பட்டாள். தன் கணவனின் முதல் மனைவியான ருக்மாபாயைத் தனது தோழியாகவே கருதினாள். கொடுத்தாள். வீட்டில் உள்ள அனைவரையும் ஒரு தாயை போல பார்த்துக்கொள்ள தொடங்கினாள்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"3

வீட்டின் முழுப்பொறுப்பையும் ஜீஜாபாயே முன்னின்று செய்ய தொடங்கினாள். 'வீட்டை விட்டு வெளியே வந்து தங்களது திறமையை வெளிப்படுத்தும் பெண்கள் மட்டுமே சாதனையாளர்கள் அல்ல. ஒரு வீட்டில் குடும்பத் தலைவியாக இருந்து குடும்ப உறுப்பினர்களின் அச்சாணியாக செயல்படும் ஒவ்வொரு பெண்ணுமே சாதனையாளர்தான்". ஒரு வீட்டில் ஒரு நாள் குடும்பத் தலைவி உடல்நலம் பாதித்து படுக்கையில் விழுந்தால் அந்த வீடே அலங்கோலமாகிவிடும். அனைவருமே திக்குமுக்காடிப் போவார்கள். அப்போது தான் அந்த பெண்ணின் முக்கியத்துவம் தெரிய வரும். எந்தவொரு இழப்பையும் இயலாமையையும் வெளிக்காட்டாமல் அனைவரின் தேவைகளையும் இனிதே தேவையான நேரத்தில் பூர்த்தி செய்கின்ற பெண்ணான ஜீஜாபாய் தனது குடும்பத்தினைத் தாங்கும் தூணாகவும் திகழ்ந்தாள். ருக்மாபாயைப் பார்த்தவுடன்,

"ஜீஜாபாய் அவள் எதிரே மண்டியிட்டு வணங்கினாள். உடம்பை எட்டாக மடித்து குனிந்து நெற்றி நிலம்பட வணங்கும் போது நீ யாரோ தெரியவில்லை. விதி என்னை உன் அருகே கொண்டுவந்து விட்டிருக்கிறது"3

என்று மனதிற்குள் உறுதிகொண்டு அவள் உடல்நலம் பெற தேவையான அனைத்து உதவிகளையும் செய்தாள்.

குடும்ப நலனுக்காகவே வாழும் ருக்மாபாய்

'திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிh.; திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்றெல்லாம் பேசப்படும் நிலையில் பொருத்தம் பார்த்து நாள் பார்த்து திருமணம் செய்தவர்களில் பலர் முதல் திருமண பந்தத்திலிருந்து விலகவோ விவாகரத்து செய்யவோ முற்படுகின்றனர். ஆனால் ருக்மாபாய் தனது கணவின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வு படுத்த ஒரு பெண்ணை இரண்டாவதாகத் தனது கணவனுக்குத் திருமணம் செய்து வைக்க விருப்பம் கொள்கிறாள்.

கணவனுடைய நன்மையை பற்றி மட்டுமே முழுநேரமும் நினைக்கும் மனைவிதான் ருக்மாபாய். மனைவி என்ற இந்த உறவுக்குரிய கடமைகளும் உரிமைகளும் சமுதாயத்தின் இன்று வேறுப்பட்டு காணப்படுகின்றன. ருக்மாபாய் இரண்டாவது மனைவி என்பவள் தன் கணவனின் வாழ்க்கைக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையவள் என்று தெரிந்தும் தனக்கு இணையாக தன் கணவன்மேல் அன்பு செய்யும் பெண்ணாக ஜீஜாபாயை முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறாள்.

தன்னுடைய உரிமைகளையும் விட்டுக்கொடுக்க முன்வந்தாள். எந்த ஒரு விழாவிலும் ஜீஜாபாயும் துகாராமுடன் இணையாக பங்கேற்று ருக்மாபாய் இவ்வாறாக ஜீஜாபாயை தன்னுடைய தோழியாக ஏற்றுக்கொண்டாள். அதனை போலவே ஜீஜாபாயும் ருக்மாபாயை அனைத்து விழாக்களிலும் தன் கணவனொடு பங்குபெருமாறு செய்தாள். ருக்மாபாயிக்கு வாழ்க்கை முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகவும் சிறப்பாக சென்றது. ஜீஜாபாயிக்கும் துகாராமுக்கும் அழகிய குழந்தை பிறந்தது. அழகிய வாழ்க்கையிலும் கூடுதலாக அழகினை சேர்க்கும் விதமாக இருந்தது இந்த குழந்தை செல்வம்.

அச்சமயத்தில் வீட்டிலே பொருளாதார பிரச்சனைகளும் ஏற்பட்டிருந்தன. குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. கிடைத்த செல்வம் களையத் தொடங்கியது. அச்சமயத்தில் வீட்டிலே பொருளாதார பிரச்சனைகளும் ஏற்பட்டிருந்தன. குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. கிடைத்த செல்வம் கனவைப் போல களையத் துடங்கியது.

> “நம்முடைய கெட்ட காலம் தான் இந்த வீட்டைப் பிடித்து ஆட்டுகிறது. தான் இங்கு வந்து வாழ்க்கைப்பட்ட நாளிலிருந்து இந்த வீடு சீசனம் அடைந்திருக்கிறதே தவிர இந்த வீடு மறுமலர்ச்சி அடையவில்லை”4

என்பதைக் கருத்தில் கொண்டு குடும்பத்தின் நன்மைகளை மட்டுமே தனது உயிர் மூச்சாக கொண்ட ருக்மாபாய் குடும்ப நிலையை நினைத்தே மனம் உடைந்து மரணத்தைத் தழுவுகிறாள். குடும்பத்தின் நன்மைகளை மட்டுமே தனது உயிர் மூச்சாக கொண்ட ருக்மாபாய் குடும்ப நிலையை நினைத்தே மனம் உடைந்து மரணத்தைத் தழுவுகிறாள். மரணம் வந்த அந்த தருணத்திலும் அவளுடைய மனதில் இருந்தது அவளின் குடும்பம் மட்டுமே.

துகாராமின் மனநிலையோ>

> ‘இந்த வீட்டில் என்ன நடக்கிறது? ஏன் இவ்வளவு துயரம்? எதனால் இத்தனை சோதனை? யார் வைத்து பொறியில் சிக்கிக் கொண்டோம்? என்ன தீங்கு செய்து இப்படி அனுபவிக்கிறோம்? என்று புலம்பிக் கொண்டிருந்தான். பாரதப் போர் நடக்கும் போது அர்ச்சுனனுக்கு இப்படித்தான் ஒரு கலக்கம் வந்தது”. எதிரே குரு பாட்டனார் சகோதர்கள், நண்பர்கள், மற்ற உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று எல்லோரும் எதிரணியில் நிற்க அவர்கள் அத்தனை பேரையும் கொல்ல வேண்டுமென்று தொடை தட்டி நிற்க வேண்டி வேதனை சோதனை அர்ச்சுனனுக்கு வந்தது”5

என்று எண்ணி மனதிற்குள் நொந்துபோனான்.

**குடும்பத்தை முன்னேற்ற துடிக்கும் அண்ணி**

பொருளாதாராம் என்பது ஆண்களுக்கு மட்டுமே உடையது என்று கருதிவரும் சூழலில் பெண்களை மையமாகக் கொண்ட குடும்ப அமைப்பு என்பது நம் தேசத்தின் சிறப்பம்சமாக உள்ளது. சமூகத்தின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பும் நிலையும் என்னவாக இருந்தது என்பதற்கு விடை தருகிறது. சங்க இலக்கியம் பண்டைய காலம் தொட்டே பெண்களை குடும்பத்தின் ஆணிவேராக தலைமையாகக் கொண்டு செயல்படும் தேசம் இந்தியா. ஆண் பொருளீட்டுவதற்காகக் கடல் கடந்து சென்று உழைக்கிறாள். அதே நேரத்தில் அப்படிச் சம்பாதிக்கப்பட்ட பொருளைச் செலவு செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் அவற்றைப் பன்மடங்காகப் பெருக்குவதற்கான பொறுப்பு பெண்கள் கையில் தரப்பட்டிருக்கிறது.

குடும்பம் என்ற அடிப்படை அமைப்புதான் நாட்டின் அடித்தளமாக விளங்குகிறது. உலகப்போர்கள் பல படையெடுப்புகள் அந்நிய ஆதிக்கம் பேரிடர்கள் பெரும்பஞ்சம் உலமயமாக்கல் என்று எத்தனை இடர்கள் வந்தபோதும் நம் நாட்டின் பொருளாதாரத்தை வலுவானதாகக் காணப்பட்டது. துகாராமின் அண்ணியின் செயலும் பொருளாதாரத்தில் தன் குடும்பத்தை மேலோங்கி முன்னேறச் செய்யும் வகையில் இருந்தது.

ஆனால் துகாராமோ அனைத்து பொருட்களையும் ஊர்மக்களுக்கு இலவசமாகவே கொடுக்க வீட்டின் பொருளாதாரம் சரிந்தது.

அச்சரிவிலிருந்து தன்குடும்பத்தினை மீட்டு பழைய நிலைக்ககு திரும்ப கொண்டுவர இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்தாள்.

'எனக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. என்னால் இந்த மாதிரியாக கூட்டத்தினரிடையே இருக்க முடியாது. இங்கு வாழ்வதைவிட மரணம் உத்தமம் என்று 'எனக்கு தோன்றிவிட்டது. எனவே நான் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன்"6

என்று தன் மனவருத்தத்தை துகாராமிடம் தெரிவித்தாள். மனமுடைந்து போன துகாராமின் அண்ணி அந்தக் கவலையிலேயே உயிர்விட்டாள்.

**அண்ணியை நம்பி வாழும் அண்ணன்**

துகாராமின் அண்ணன் தன் மனைவியை முழுமையாக நம்பி வாழ்ந்து வருகிறான். பொருளாதாரம் முழுவதும் அண்ணியும் துகாராமும் செய்வதால் துகாராமின் அண்ணன் இதனைப் பற்றி எந்த கவலையும் இல்லாமல் பொறுப்பின்றி இருகிறான். மூன்று வேலையும் வீட்டிலே நன்றாக சாப்பிட்டு ஊரை சுற்றி திரிவதே முழுநேர வேலையாக செய்து வந்தான். இந்த நிலையில் வீட்டில் ஏற்படும் பொருளாதார சிக்கலால் மனம் உடைந்து காணப்படும் மனைவியைக் கண்டு துகாராமின் அண்ணன் வருத்தபடுகிறான். இந்த சூழலில் தன்னால் எதுவும் செய்ய இயலவில்லையே என்ற வருத்தமும் மேலிடுகிறது.

இருப்பினும் வறுமைநிலை நீடிக்க துகாராமின் அண்ணியும் இறந்து விடுகிறாள். இது துகாராமின் அண்ணனின் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

"மனைவியைக் காப்பாற்ற வக்கில்லாதவனாக போய்விட்டேனே. வியாபாரியாக பிறந்தும் சாமர்த்தியம் இல்லாமல் கிடக்கின்றேனே. கடவுள் என்னை எந்த விதத்திலும் கைத்தூக்கவில்லையே"7

என்று மனம் தாங்காத துகாராமின் அண்ணன் அவ்வூரினை விட்டு காசி சென்று விடுகிறான். அவனை முழுவதுமாய் இறைவனுகே அர்பணிக்கிறான்.

**குடும்ப சார்ந்த கடமை**

நோயுற்ற உறவினர்களைக் கவனித்துக்கொள்வது முதல் சமூகத்தில் குடும்பத்தின் மதிப்பைப் பேணும் விதத்தில் நடந்துகொள்ளுதல் குடும்பத் தகுதிக்கு ஏற்றபடி பெற்றோர் சொற்படி திருமணம் செய்தல் போன்றவை வரை பிள்ளைகளின் கடமைகள் பலவிதமாக வடிவம் பெற்றுள்ளன.

ஒவ்வோர் குடும்பத்திலும் பல வகையான நன்மைகள் மட்டுமன்றி பலவகையான தீமைகளும் ஏற்படுகின்றன. அதனை அனுசரித்து நடந்தாலே குடும்பத்தை மகிழ்ச்சியுடன் நடத்த முடியும். குடும்பம் என்பது மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்ப அமைப்பு ஒழுங்கான முறையில் அமைந்தால் அது நல்ல குடும்பம் எனப்படும். குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு பெற்ற பிள்ளைகள் உறவு உடன் பிறந்தோருக்கிடையிலான உறவு போன்ற அம்சங்களில் அநேகமாக எல்லாவகைக் குடும்பங்களும் ஒத்த இயல்பு காணப்பட்டாலும் வேறு பல அம்சங்களின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக பிளவுபடுகின்றது.

குடும்பத்தில் கடகைகளைச் சரியாக செய்யும்போது சில வேளைகளில் சொந்த நலன்களைத் தியாகம் செய்யும் நிலை ஏற்படுவது உண்டு. மாறாகத் தன்னலம் கருதி கடமையைச் செய்ய இயலாமல் போகிறது.

இதில் துகாராமின் அண்ணி தனது குடும்பத்திற்காக தன்னால் இயன்ற அனைத்தையும் தியாகம் செய்தாள். ஜூஜாபாயும் தனது கடமையை சிறப்பாகவும் சரியாகவும் செய்தாள்.
ஆனால் துகாராம் அவ்விதம் இல்லாமல் தனது குடும்ப கடமையிலிருந்து தவறியதாலே குடும்பத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகிறது. எனவே சமுதாய நலனோடு தன் குடும்பத்தையும் நலனையும் பார்க்க வேண்டும். கவனித்தல் மனதில் இருத்தல் வேண்டும்.

'தனக்கு மிஞ்சியே தானமும் தர்மமும்" என்ற பழமொழி துகாராமின் நினைவிற்கு வரவே இல்லை. துகாராம் கொஞ்சமும் அவ்வண்ணம் நடந்துக் கொள்ளவே இல்லை.

**கணவன் மனைவி உறவு**

திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம் மட்டுமல்ல இருமணம் ஒன்றாகி ஒரு மனமாக கலப்பதே திருமணம் எனப்படுகின்றது. ஓரிருநாள் சடங்கில் முடிந்து போவது திருமணம் இல்லை. வாழ்க்கை முழுவதும் 'திரு"வாளனும் 'திரு"மதியும் சில நெறிகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். கணவனும் மனைவியும் எப்போதும் சுகதுக்கங்களையும் குடும்ப சுமையையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரே மனதாக இணைந்திருத்தல் வேண்டும். மனைவிக்கு விருப்பமில்லாததை கணவனும் கணவனுக்கு விருப்பமில்லாத மனைவியும் விட்டுக்குடுக்கும் மனப்பக்குவம் வேண்டும்.

இதில் துகாராம் ருக்மாபாயையும் ஜூஜாபாயும் நன்றாகவே புரிந்து வாழ்ந்து வந்தார். அதனைப் போலவே ருக்மாபாயும் துகாராம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அனைத்தையும் செய்தாள். ஜூஜாபாய் எந்த ஒரு மன வருத்தமும் கொள்ளாமல் தன் குடும்பத்துக்காக அனைத்து நன்மைகளையும் செய்தாள். துகாராமின் அண்ணியும் அவளுடைய கணவனுக்காக தன்னால் முடிந்த வரை பொருளாதாரத்தை உயர்த்தும் முனைப்புள்ளவளாக செயல்பட்டாள்.

**குடும்ப ஒற்றுமை உணர்வுகள்**

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாகவே இருங்கள் என்றார் அன்னை தெரசா. உணர்ச்சி அறிவு என்கிற எதிரெதிரான விஷயங்களின் ஆச்சரியமான கலவை தான் மனிதன். எப்போதும் உணர்ச்சி பூர்வமாகவே வாழ்ந்து விடமுடியாது. குடும்ப தலைமை என்பது அடக்குமுறை ஆக்கிரமிப்பின் ஆரம்பம் என்று உணர்வதை விட சரியான பாதுகாப்பு ஏற்பாடு என்பதே உண்மை. குடும்பம் என்பது ஒரு கூட்டணி அரசு. அது பெரும்பாலும் எதிர்கட்சிகளால் கவிழ்வது இல்லை. தன் கட்சி உறுப்பினர்களாயே கவிழும்.

சிலைக்கு வலிக்குமோ என்று சிற்பி வருந்தினால் சிற்பம் பிறக்காது. வலி சிலைக்கு மட்டும் அல்ல செதுக்கின்ற உளிக்கும் தான் என்று சிற்பத்திடம் சொல்லிவிட்டு சிற்பி தொடர்ந்து செதுக்க வேண்டும். அதை போல குடும்பத்திலும் கணவன் மனைவி உறவில் சண்டை வந்தால் அந்தவலி குடும்பத்திற்குத்தான் என்று நினைத்து குடும்பத்தில் சண்டையை விடுத்து வாழ்வில் சுகம் காண விழைய வேண்டும்.

இதனை போலவே துகாராமின் குடும்பத்திலும் ஒற்றுமையும் புர்pதலும் நிறைந்து காணப்பட்டது. துகாராமினை புரிந்து கொண்ட ஜூஜாபாய் அவனை விட்டு எப்போது பிரியாமல் அவனுக்கு துணையாகவே இருந்தாள். துகாராமின் அண்ணனை புரிந்து கொண்ட அண்ணி அவனை விட்டு நீங்காமல் அவனுடனே இருந்து அவனை நேசித்தாள். வீட்டில் உள்ள எல்லோரும் புரிந்து

கொண்டு ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

**மரணம் குறித்த செய்திகள்**

பிறப்பைப் போன்ற இழப்பும் ஒரு நிகழ்வு தான். ஆனால் பிறக்கும் நம்மைச் சார்ந்தவர்கள் மகிழ்வார்கள். இறக்கும் போது வருந்துவார்கள். இது ஒரு மாறுப்பட் நிலையென்றாலும் ஒருவர் இவ்வளவு காலம் கூடவே வாழ்ந்து அடுத்த நிமிடம் முதல் நம்மோடு இருக்கமாட்டார் என்பது எவ்வளவு வேதனையைக் கொடுக்கும். அந்த நிலைதான் மரணம். துகாராமின் அண்ணியின் இறப்பை தாங்க முடியாத துகாராமின் அண்ணன். அந்த இடத்திலே மயங்கி விழுந்தான். அண்ணனுக்கு அண்ணியின் மேல் காதலை விட நன்றி தான் அதிகமிருந்தது. ‘தான் செய்ய வேண்டிய வேலை அனைத்தையும் நீ செய்கிறாயே என்ற சந்தோஷம் இருந்தது. இனிமேல் நீ இல்லை என்றால் நான் என்ன செய்வேனோ” என்றல்ல புலம்ப துடங்கினான். அக்னிச் சட்டியை கையில் ஏந்தி காடுவரை நடக்க முடிகின்ற ஆளாக அவரைப் பார்த்தால் தெரியவில்லை. “சரி. உன் தாயாருக்கு கொள்ளி வைத்ததைப் போல அண்ணிக்கும் நீயே கொள்ளிவை” என்று உறவுகள் முடி வெடுத்தார்கள்.

குடும்பமே நிலைகுலைந்து காணப்பட்டது. இப்படி இருக்க எல்லாவற்றையும் விட பெரிய இடி போன தலைமுறையை பிடுங்கிக் கொண்டு போனதல்ல. அடுத்த தலைமுறையாக நாளையை நம்பிக்கையையும் துகாராமை அழ வைத்துவிட்டது. ‘இப்போ பிறந்த குழந்தை என்ன செய்தது மரணத்தில் மடியில் கொடுத்து விட்டோமே என்று கதறினார்”.

அண்ணியையும் பிறந்த பிஞ்சு குழந்தையும் மரணத்தின் மடியில் தந்த வருத்தத்திலே குடும்பம் இருந்தது. குடும்பத்தின் நலனையே தனது வாழ்வாக கொண்ட ருக்மாபாயின் நிலைமை மிகவும் மோசமானது. இந்த நிலையில் ருக்மாபாயின் உயிரும் அவளை விட்டுபோனது. துகாராமின் வீட்டிலே தொடர்ந்து மரணம் நிகழ்ந்தது.

ருக்மாபாயின் இருந்தே தொடங்கியது மரண ஓலம். நான் இறந்தால் இந்த வீடு சுபிட்சமாகி விடும் என்று நினைத்தாள். இறைவனை வேண்டிக்கொண்டு உணவினை சுருக்கினாள். ருக்மாபாயும் வெகு சீக்கிரம் இறந்தாள்.

ஈகை பண்பில் வாழும் வழிமுறைகள்

வறுமையில் இரந்துவந்து கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாது கொடுத்தால் கொடிய வறுமைக்கண் பசி தீர்க்கும் உணவைக் கொடுப்பது ஈகை எனப்படும்.

“வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதீர்ப்பை நீர துடைத்து”8 (குறள்: 221)

இல்லாதவருக்கு வழங்குவதே ஈகைப்பண்பாகும். மற்றவர்களுக்கு வழங்குவது என்பது ஏதோ ஓர் ஆதாயத்தை எதிர்பார்த்து வழங்கப்படுவதாகும். இக்குறளுக்கேற்ப ஊர்மக்கள் அனைவரும் வறுமையில் வாடிய போது துகாராம் தன் கையில் உள்ள பொருட்களை மிகக்குறைந்த விலைக்கு கொடுத்து வந்தான். காலப்போக்கில் வறுமை நீடிக்க பணம் இல்லை உதவி என்று கேட்டு வரும் ஏழை எளியோருக்கு இலவசமாகவும் கொடுத்து வந்தான். அவனிடம் இருந்த அனைத்து செல்வத்தையும் ஊர்மக்களுக்கே தந்துவிட்டான்.

இதனால் குடும்பத்தில் வருத்தமும் வறுமையும் ஏற்பட்டுகிற தன் குடும்ப உறுப்பினர்கள் பலரும் மரணத்தில் மடிக்கே சென்றனர்.

இத்தனை வருத்தமான நிகழ்வுகள் நடந்தாலும் ஈகை பண்பு மட்டும் மாறவே இல்லை.

> “பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்லநெறி என்றாலும் கொள்ளல் தீமையானது. மேலும் இல்லை என்றாலும் கொள்ளல் தீமையானது. மேலும் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பதே சிறந்தது”9

வாழ்க்கையை வெறுத்து இறந்து விடலாம் என்று எண்ணியபோதும் “தமது உயிர் இறைவன் கொடுத்தது. எனவே இறைவனுக்கே நம்மை சமர்ப்பிப்போம் என்று எண்ணினான். பின்பு துகாராம் துன்பத்திலும் கவலையிலும் இருக்கும் மக்களுக்கு தன்னால் முடிந்தவரை மனகவலைகளைப் போக்க இறைவனை நினைத்து பாடத் துடங்கினான். இறைவனே துணை என்று எண்ணி தன் வாழ்க்கையைத் தொடங்கினான்.

**தொகுப்புரை**

- துகாராம் எல்லோரையும் புரிந்துகொண்டு நடப்பவன். தன் முதல் மனைவியான ருக்;மாபாய் குழந்தை பெற முடியாது எனத் தெரிந்த பின்பும் துகாராம் அவளைக் கடைசிவரை கைவிடாமல் உறுதுணையாக நின்றான். வறுமை வாட்டிய நிலையிலும் மக்களுக்கு இலவசமாக மருந்துப் பொருட்களை விற்று உதவினான்.
- ருக்மாபாய் தன்னுடைய உடல்நலத்தைக் கருத்தில்கொண்டு தன் கணவனுக்கு இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முன்வருகிறாள். திருமணம் முடிந்த பிறகும், தன் அன்பு நிலையிலிருந்து மாறாமல் இருக்கிறாள். தன் கணவனின் இரண்டாவது மனைவியை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு தோழியாகவே பாவிக்கிறாள். இறுதிவரையில் தன் குடும்பத்தின்மீது மிகுந்த அன்பு கொண்டவளாக இருக்கிறாள்.
- ஜீஜாபாய் இரண்டாவது மனைவியாக இருந்தாலும் கூட தன் கணவனின் முதல் மனைவி மீது மிகவும் அக்கறை கொண்டவளாக இருக்கிறாள். வீட்டு வேலைகளோடு சேர்த்து ருக்மாபாயையும் நன்கு கவனித்துக் கொள்கிறாள். குடும்பத்தின் மீது அன்பு, அக்கறை, பொருளாதார முன்னேற்றம், குடும்ப முன்னேற்றம் என அனைத்தையும் பார்த்துக்கொண்டு பொறுப்புள்ள இல்லத்தரசியாகத் திகழ்கிறாள்.
- துகாராமின் அண்ணி குடும்பசூழல் பலவிதமாக மாறினாலும் தன்னுடைய குடும்பத்தின் வறுமானம் பொருளாதாரம் என அவளின் முழுகவனமும் வியாபாரத்தின் மீதுதான் இருந்தது. தன் குடும்பத்தில் பலமுறை வறுமை ஏற்பாட்டாலும், தன்னுடைய குடும்பத்தை முன்னேற்றுவதற்கு தொழில்முறையில் மாற்றங்களையும் புதுமைகளையும் கொண்டுவந்தாள். துகாராமின் அண்ணி குடும்பத்தின் வியாபார உயர்வுக்குத் தன்னால் இயன்றவரை போராடினாள். இறுதியில் குடும்பத்தின் நிலையை எண்ணி கவலையிலேயே உயிர்விட்டாள்.
- துன்பம் மனதைத் தூய்மையடைய செய்கிறது. இறைவன்மீது பற்று இல்லாதவர்களையும் பற்றும்படி செய்கிறது. துன்பம் சிந்தனையைத் தூண்டி ஞானத்தை வளர்க்கிறது. துன்பத்தை அனுபவித்தால் உள்ளம் பக்குவப்பட்டு பிற உயிர்களின் துன்பத்தை உணரும் ஆன்மநேயம்

பெறுகிறது. உள்ளத்தை உறுதியாக்குகின்றது. துன்பத்தை ஏற்றுக்கொண்டால் அது தவமாகப் பயன்படுகிறது. மனித வாழ்வு துன்பத்திற்குப் பின் இன்பம் என மாறி மாறி வரும் தன்மையுடையது. துயரமில்லா ஆனந்த வாழ்விற்கு ஏங்கும் மனம் கடைசியில்தான் ஆன்மீக வாழ்க்கை என்ற உண்மையை உணருகின்றது என்பதை 'சக்ரவாஹம்' புதினம் உணர்த்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பாலகுமாரன் சக்ரவாஹம் ப. 20
2. மேலது ப. 25
3. பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் ப. 87
4. மேலது ப. 65
5. மேலது ப. 66
6. மேலது ப. 63
7. மெய்யப்பன் (ப.ஆ) திருக்குறள் ப. 67
8. மேலது ப. 66
9. மே.கு.நூ. ப. 35

**துணைநூற்பட்டியல்**

**முதன்மை ஆதாரம்**

பாலகுமாரன் சக்ரவாஹம்
விசா பப்ளிகேஷன்ஸ்
வெங்கட் நாராயணா ரோடு,
தியாகராய நகர்,
சென்னை – 600 017.
இரண்டாம் பதிப்பு – ஏப்ரல் 209

**துணைமை ஆதாரம்**

1.பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள்
அருணா பப்ளிகேஷன்ஸ்
வில்லிவாக்கம்
சென்னை – 600 049

2.மெய்யப்பன் (ப.ஆ) திருக்குறள்
மணிவாசகர் பதிப்பகம்
31 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை – 600 108.